Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 272 | வியாழக்கிழமை 25 ஒகஸ்ட் 2022 | ஆவணி 09 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 20 | விலை : ரூ. 50



**முச்சந்தி முரளி**

"முந்தி குண்டு போட்டு தாலி அறுத்தவைக்கு இப்பவும் அந்தப் பழக்கதோசம் போகேலை பாருங்கோ"

# அநாவசிய செலவுகளைத் தவிருங்கள் அத்தியாவசிய உணவைச் சேமியுங்கள்

## இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு நெருக்கடி தொடரும் - ரணில் மீண்டும் எச்சரிக்கை



**கொழும்பு, ஓகஸ்ட் 25**

**பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டெழ 2 ஆண்டுகளாவது தேவை. அதிலும் எதிர்வரும் ஓராண்டு எமக்கு மிகப் பெரிய சவாலான ஆண்டாகும். இந்த நிலையில் நாட்டு மக்கள் அநாவசியச் செலவுகளைத் தவிர்த்து அத்தியாவசிய உணவுப் பொருள்களை சேமித்து வைக்கவேண்டும் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்புச் செய்தியாளர் ஒருவருக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.**

19 ➤



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் சப்பை ரதத் திருவிழா நேற்றுமாலை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ இடம்பெற்றது.
(படம் ஐ.சிவசாந்தன்)
(மேலும் படங்கள் உள்ளே)

# நல்லூரானுக்கு இன்று தேர்!

யாழ்ப்பாணம், ஓக. 25
அலங்காரக் கந்தன் என்று வர்ணிக்கப்படும் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திரு விழாவின் தேர் 19 ➤

# ஐ.எம்.எப். பிரதிநிதிகள் ரணிலுடன் நேற்று பேச்சு

## நாளை மீண்டும் சந்திக்கவும் இணக்கம்

கொழும்பு, ஓக. 25
இலங்கை எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடிக்குத் தீர்வு வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியத்துட 19 ➤

# கடன் மறுசீரமைப்பு; நிலைப்பாட்டை மாற்றுக!

## சீனாவிடம் இலங்கை கெஞ்சல்

கொழும்பு, ஓக. 25
கடன் நிவாரணம் தொடர்பான தனது நிலைப்பாட்டை 'வியத்தகு' முறையில் மாற்றிக் கொள்ளுமாறு சீனாவை இலங்கை கோருகின்றது என்று 19 ➤

# சுதுமலையில் வீடு புகுந்து தாக்குதல்

## ஓட்டோ, மோட்டார் சைக்கிள் பெற்றோல் ஊற்றி எரிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 25
சுதுமலையில் வீடொன்றினுள் நேற்று அதிகாலை அத்துமீறி உள்நுழைந்த கும்பல், வீட்டில் நிறுத்தி 20 ➤

# அமைச்சரவையில் இனி பெரமுனவே ஆதிக்கம்

## மறைமுகமாக ஒப்புக்கொள்கிறார் பிரதமர் தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, ஓக. 25
புதிய அமைச்சரவை நியமனத்தின்போது ஒவ்வொரு கட்சிகளினதும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்ப 19 ➤

# தாலிக்கொடியை அறுத்த சிப்பாய் மடக்கிப் பிடிப்பு

வவுனியா, ஓக. 25
வவுனியாவில் தாலிக் கொடியை அறுத்துக் கொண்டு தப்பிச்சென்ற சிப்பாய், பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று இடம் 19 ➤

மொட்டு அணியினர்

# தொலைபேசிகளை ஒப்படைக்க தயக்கம்

கொழும்பு, ஓக. 25
'கோத்தா கோ கம' போராட்டக்காரர்கள் மீது கடந்த மே மாதம் 9ஆம் திகதி தாக்குதல் நடத்தியமை தொடர்பில் சந்தேகநபர்களாக பெயரிடப்பட்டுள்ள டான் 20 ➤

# ஜோசப், ஜீவந்த உட்பட நால்வருக்குப் பிணை!

விரிவு பக். 20

## 93 கிலோ நிறையுடைய

# மின்சாரக் கம்பிகளுடன் சுன்னாகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 25
சுன்னாகம் நகரப் பகுதியில் 5 மூடைகளில் கடத்திச் செல்லப்பட்ட 93 கிலோ மின்சாரக் கம்பிகளுடன் சந்தேகநபர் ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது 19 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுக்கான பணவீக்கத்துக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும்!

## விவசாய அமைச்சர் உறுதி

கொழும்பு, ஓக.25

**உணவுப் பொருள்களின் விலையேற்றம் அதிகமாக உள்ள நாடுகளில் சிறிலங்கா ஐந்தாவது இடத்தில் இருப்பது தொடர்பில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர வருத்தம் தெரிவித்துள்ளார்.**



இந்த நிலைமைக்குத் தீர்வுகாண முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உணவுக்கான பணவீக்கத்துக்குத் தீர்வு காண வேலைத்திட்டம் வகுக்கப்பட வேண்டும். இதைத் தவிர்க்க முடியாது என்றாலும், அதற்கு தீர்வு காண முடியும். சிறிலங்கா அரிசி உற்பத்தியைக் கொண்ட நாடு. உணவில் தன்னிறைவு பெற்ற நாடு. இப்படியிருக்கையில், இரசாயன உரப் பாவனையை தடை செய்வதற்கான தீர்மானம் உட்பட பல்வேறு பிரச்சினைகள் இந்த நிலைக்கு வழிவகுத்தன.

ஜனாதிபதியும் நானும் உணவு நெருக்கடி தொடர்பில் மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்தினோம். நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் சவாலை விவசாயிகள் இன்று ஏற்றுக் கொண்டுள்ளனர்.

விவசாய அமைச்சராக பொறுப்பேற்றபோது 2 லட்சத்து 48 ஆயிரம் ஏக்கர் காணியில் மாத்திரமே விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. அதை 2 லட்சத்து 75 ஆயிரம் ஏக்கராக அதிகரிக்கவுள்ளோம். எரி பொருள் மற்றும் உரத்தை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் விவசாய நிலப்பரப்பை 5 லட்சத்து 12 ஆயிரத்து 500 ஹெக்டெயராக அதிகரிக்க முடியும். அவ்வாறு செயற்பட்டால் நாட்டில் ஏற்படக்கூடிய அரிசித் தட்டுப்பாட்டைத் தடுக்க முடியும் -என்றார். (எ-இ)

# ரணிலைச் சந்தித்த ஜப்பானிய தூதுவர்

கொழும்பு, ஓக.25

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகிக்கும் இடையில் சந்திப்பொன்று நடந்துள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜப்பானியப் பேரரசர் ஹிரோனோமியா நரஹிட்டோவின் வாழ்த்துகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரிவித்த ஜப்பானியத் தூதுவர், ஜனாதிபதியுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன, 'சென் பிரான்சிஸ்கோ சமாதான மாநாட்டில்' உரையாற்றி, 70 ஆண்டுகள் நிறைவடையவுள்ளது. அதை முன்னிட்டு ஜப்பான் தூதரகமும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள விசேட நிகழ்ச்சி, செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. இது தொடர்பாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

# ஹிருணிகாவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக.25



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமசந்திரவுக்கு எதிராக சட்ட மா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மேலதிக விசாரணைகளுக்காக எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (எ-இ)

### மத்திய வங்கி ஆளுநர் நந்தலாலால்

# இடைக்கால பட்ஜெட் மீது எம்.பிக்களுக்கு விளக்கம்!

கொழும்பு, ஓக. 25

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, இடைக்கால வரவு செலவுத் திட்டம் மற்றும் நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் எதிர்வரும் 30ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அனைத்து அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் விசேட உரையொன்றை வழங்கவுள்ளார்.

அன்றையதினம் பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை இந்த உரை இடம்பெறவுள்ளது.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முற்பகல் நடைபெற்ற நாடாளுமன்ற விவகாரக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்களுக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டு (திருத்த) சட்ட வரைவை எதிர்வரும் 30ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இரண்டாம் வாசிப்புக்காக (வரவு- செலவுத் திட்ட உரை) சமர்ப்பிக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

# ஜனாதிபதி செயலகத்தின் பணிப்பாளராக தென்னக்கோன்

தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களின் முன்னாள் ஆளுநரான ரஜித் கீர்த்தி தென்னக்கோன், ஜனாதிபதி அலுவலகத்தின் சமூக விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சிவில் அமைப்புகள், மனித உரிமைகள், தேர்தல் கண்காணிப்பு உள்ளிட்ட பல துறைகளில் பணியாற்றிய தொழில் வல்லுநர் என்பது குறிப்பிடத்தக்கது. (ய-இ)

# காற்றுடன் மழை தொடரும்

கொழும்பு, ஓக. 25

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் குருநாகல், கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என்றும் சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி ஏற்படும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப்பகுதிகளிலும் அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-14-இ)

# தன்னிறைவுப் பொருளாதாரமே உணவுப் பிரச்சினைக்குத் தீர்வு!

## பிரதமர் தினேஷ் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 25

நாட்டில் நிலவி வரும் உணவுப் பிரச்சினைக்கு அனைவரும் ஒன்றிணைந்து தீர்வுதேட வேண்டும். தன்னிறைவான பொருளாதாரக் கொள்கைகளின் ஊடாக இந்தச் சவால்களை வெற்றிகொள்ள முடியும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

கோட்டை சிறிநாக விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக சாதாரண சட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது. எனினும் மேலதிகமாக எந்தவித செயற்பாடுகளையும் எடுக்கவில்லை. தற்பொழுது நாட்டில் அவசரகாலச் சட்டமும் நீக்கப்பட்டுள்ளது. மேலும், நாட்டில் நிலவி வரும் உணவுப் பிரச்சினைக்கு அனைவரும் ஒன்றிணைந்து தீர்வுதேட வேண்டும். தன்னிறைவான பொருளாதாரக் கொள்கைகளின் ஊடாக இந்த சவால்களை வெற்றிகொள்ள முடியும் -என்றார். (ம-14-இ)

# நாட்டில் உறுதித்தன்மையை ஏற்படுத்த பொதுத்தேர்தல் அவசியம் தேவை!

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 25

நாட்டில் உறுதித்தன்மையை ஏற்படுத்த எம்.பி க்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொதுமக்களின் அதிகாரம் மீளப்பெறப்பட்டு பொதுத்தேர்தல் நடத்தப்படுவது அவசியமாகும். இவ்வாறு ஜே.வி.பியின் மத்திய செயற்குழு உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்குப் பொருளாதாரத்தைக் கொண்டுவரும் வழிகளாக வெளிநாட்டில் தொழில் புரிவோர் வருமானம், சுற்றுலாத்துறை வருமானம், ஏற்றுமதி வருமானம், வெளிநாட்டு முதலீடு என்பவற்றை முக்கியமான காரணியாகக் கொள்ளலாம். ஆனால், இலங்கையில் சமூக உறுதித்தன்மை தற்போதில்லை. இதனால் பொருளாதாரத்தை கொண்டுவரும் வழிகள் அந்தரத்தில் உள்ளன.

தற்போதைய அரசியல் அமைப்புப்படி முத்துறை அதிகாரங்களான சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை என்பன பொதுமக்கள் வசம் வரவேண்டும். கடந்த சில மாதங்களாக நான்கு முறை ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஆனால் 225 பிரதிநிதிகளில் மாற்றம் இல்லை. ஒரே நாடாளுமன்றம். அதே நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

ஆனால், பிரதமரும் ஜனாதிபதியுமாக நான்கு பேர் மிகக் குறுகிய காலத்தில் ஆட்சி செய்தனர். அரசியலில் உறுதித்தன்மை இல்லை என்பதையே இது காட்டுகின்றது.

எனவே, உள்நாட்டில் அரசியல் உறுதித்தன்மையை ஏற்படுத்தப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொதுமக்களின் அதிகாரம் மீளப்பெறப்பட வேண்டும். அதற்குப் பொதுத்தேர்தல் ஒன்று தேவை -என்றார். (ம-14-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## முக்கிய அறிவித்தல்

துன்னாலை மேற்கு. கரவெட்டியில் வசிக்கும்
**பாலன் தவயோகம் சமாதான நீதவான்**
ஆகிய நான் அறியத்தருவது எனது
கையெழுத்துடன் வரும் படிவங்களை எனது
மறு அறிவித்தல் வரும் வரை வங்கிகளோ.
நிறுவனங்களோ. பொது மக்களோ அனுமதிக்க
வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றேன்.

**பா. தவயோகம் JP**
**துன்னாலை மேற்கு, கரவெட்டி.**

(CS 18695) (2-6)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
**திரு.பா.விக்கினேஸ்வரன்** அவர்களின்
அன்புத் தந்தை
**அமரர் பொன்னையா பாலசிங்கம்**

**பிறப்பு:23.12.1947 இறப்பு:22.08.2022**

அவர்கள் இறைபதமடைந்தமையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/நாவற்குழி மகா வித்தியாலயம்**

(CS 20453) 1-6

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் ஆய்வுகூட உதவியாளராகப் பணியாற்றும் **திரு.ப.சுதாகரன்**
அவர்களின் அன்புத்தாயார்
**திருமதி செல்வராணி பராபரம்**
கடந்த (22.08.2022) அன்று இறைபதமடைந்தமையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கல்விசாரா ஊழியர்கள்**
**யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.**

(cs.46143) (2-6)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியரும். சேவையாளர் சங்க உறுப்பினருமான **திரு.க.சரவணபவான்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி**
**நாகேஸ்வரி கந்தசாமி**
24.08.2022 புதன்கிழமை
இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு. ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**சேவையாளர் சங்கம்,**
**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.**

(CR 8683) 1-6

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
10 . 02 . 1950

ஆண்டவன் அடியில்
25 . 08 . 2012

### அமரர் இந்திரா சபாரத்தினம்

பத்து வருடங்கள் பறந்தோடிப் போனதுவே!
நீளும் இரவுகளில் உங்களை நினைக்கையிலே
விழியோரம் கண்ணீரில் கரைகிறது உன் நினைவு
கள்ளமற்ற சிரிப்பு கனிவான பார்வை
கோபத்தில் பொங்கிடினும் மாறாத பாசம்
உங்களைத் தவிர ஜவரின் ஒருவர் இல்லையெனில்
எங்கே? எங்கே? என தேடி நிற்கும் தவிப்பு.
அத்தனையும் நாம் தோற்று ஆண்டுகள் பத்தாகி!
எப்படிக் கடந்து வந்தோம் என நினைத்து நிற்கையில்
ஒரு கணமும் பிரியாது எம்மோடு பயணிக்கும்
மலர்களுக்குள் சிரிக்கும் உங்கள் மலர்ந்த முகம் பதிவாச்சு!
நன்றி அக்கா! நன்றி! நான்றி!

**இல.5, கண்டி வீதி,**
**சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்**

(cr.8677) (2.6)

## மரண அறிவித்தல்

மலர்வு
15.10.1945



உதிர்வு
22.08.2022

### பாலகுமாரசுவாமி சர்மா

காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் புத்தூர் சிவன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது தந்தையாரான பாலகுமாரசுவாமி சர்மா அவர்கள் கடந்த (22.08.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் புத்தூர் சிவன்கோவிலின் வடக்கு வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நாளை (26.08.2022) வெள்ளிக் கிழமை மு.ப. 10.30 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ந.ப. 12.30 மணியளவில் கிந்துசிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

(CS 20466) 1-5

## மரண அறிவித்தல்

பிறப்பு
10 . 07 . 1932



இறப்பு
24 . 08 . 2022

### திருமதி வைத்தி பூரணம்

நயினாதீவு நான்காம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி வைத்தி பூரணம் நேற்று (24.08.2022) புதன்கிழமை இறைபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற வைத்தியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கனக்ராசா மற்றும் பரமேஸ்வரி. சரஸ்வதி. கனகேஸ்வரன் நாகேஸ்வரி. அருள்ராஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிலோமினா. மாணிக்கம். மகேந்திரன். ரஞ்சினி. மார்க்கண்டு. இன்பராணி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சல்லிபரவை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**நான்காம் வட்டாரம்,**
**நயினாதீவு.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
25 - 04 - 1939



மறைவு
24 - 08 - 2022

### திரு.கணபதிப்பிள்ளை சிவலிங்கம்

(முன்னாள் இளைப்பாறிய பிரதிச் செயலாளர் திட்டமிடல்)

காரைநகரை பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கணபதிப்பிள்ளை சிவலிங்கம் (முன்னாள் இளைப்பாறிய பிரதிச் செயலாளர் திட்டமிடல்) நேற்று (24.08.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் கணபதிப்பிள்ளை தனுஸ்கோடி தம்பதியரின் மகனும் பத்மினியின் (ஓய்வுபெற்ற பிராந்திய ஆணையாளர்) அன்புக் கணவரும். சிவபாக்கியம் (இந்தியா வைத்திய கலாநிதி). மங்கையர்க்கரசி (அமரர் சட்டத்தரணி). நடராஜா (அமரர் மருந்தாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருச்செந்தில்வேல். 'ரோகிணி (அமரர். முன்னாள் யாழ் பல்கலைக்கழக நூலகர்). சதானந்தன் (இந்தியா). திருக்குமார். பேராசிரியர். நந்தகுமார் (பேராதனைப் பல்கலைக்கழகம்). ஜெயக்குமார் (U.S.A). நளாயினி (U.K). விஜயகுமார் (U.S.A) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2022) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பதுமாலயம்,**
**உரும்பிராய் மேற்கு,**
**மானிப்பாய் வீதி.**

தகவல்: **குடும்பத்தினர்.**
**077 386 8590**

(cr.8677) (2.6)

## தேசிய இனப்பிரச்சினையை தீர்த்தாலேயே புலம்பெயரிகளின் உதவி கிட்டும்!

### சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 25
புலம்பெயர் உறவுகளின் உதவிகளை இலங்கை அரசாங்கம் பெறவிரும்பினால் தேசிய இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை முன்வைப்பதுடன் தனது நம்பகத் தன்மையையும் வெளிப்படுத்த வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
கடந்த சில நாள்களுக்கு முன்பாக குறிக்கப்பட்ட சில புலம்பெயர் அமைப்புகள் மீது விதிக்கப்பட்டிருந்த தடையையும், அதேபோல் புலம்பெயர் தனிநபர்கள் சிலரின் மீதான தடையையும் நீக்கியுள்ளதாக அரசாங்கம் வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளது. தமிழ்த் தேசியப் பரப்பில் அரசியல் பணியாற்றும் சில கட்சிகளும் அமைப்புகளும் இதனை வரவேற்றுள்ள அதேவேளை, பலர் இந்த அறிவித்தல் தொடர்பில் அரசாங்கத்தின் நம்பகத்தன்மை குறித்து கேள்வி எழுப்புகின்றனர்.
காரணம், புலம்பெயர் உறவுகள் மீதான தடையை ஓர் அரசாங்கம் விலக்குவதும் மற்றொரு அரசாங்கம் மீண்டும் தடைவிதிப்பதும் வழக்கமான ஒன்றாகி விட்டது.
ஜெனிவா மனித உரிமைகள் ஆணையகத்தின் கூட்டத்தொடர் ஆரம்பிக்கின்ற காலங்களில், இலங்கை அரசாங்கம் இவ்வாறான சில அறிவித்தல்களை வெளியிடுவதும் ஒரு நடைமுறையாக இருக்கின்றது.
இலங்கை இரண்டு முக்கிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றது. ஒன்று பொருளாதார ரீதியாக வங்குரோத்து நிலையில் இருக்கின்றது. அந்த வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்பு தேவையாக இருக்கின்றது. அவ்வாறான நிதிநிறுவனங்களைத் திருப்திப்படுத்துவதும் அதே சமயம் ஜெனிவா மனித உரிமைகள் ஆணையகம் போன்றவற்றைத் திருப்திப்படுத்துவதும் இலங்கைக்கு முக்கியமான தேவைகளாக இருக்கின்றது. ஆகவே புலம்பெயர் அமைப்புகளின் மீதான தடை நீக்கம் என்பது அரசாங்கம் தன்னைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு எடுக்கப்படும் ஒரு நடவடிக்கையாகவே தோற்றம் அளிக்கின்றது. எனவே இனப்பிரச்சினையைத் தீர்த்து ஒரு நம்பகத்தன்மையை உருவாக்கினால் மட்டுமே புலம்பெயர் உறவுகளிடம் இருந்து உதவி கிட்டும் -என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மன்.மருத்துவமனைக்கு காசோலை கையளிப்பு



மன்னார், ஓக. 25

மன்னார் பொது மருத்துவமனையின் குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரத்தைத் திருத்துவதற்கு 31 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான காசோலை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டது.

மன்னார் பொது மருத்துவமனையின் மகப்பேற்று மற்றும் தாய்மார்கள் விடுதிக்கருகில் பொருத்தப்பட்டிருந்த குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் கடந்த 5 மாதங்களுக்கு மேலாகப் பழுதடைந்து காணப்பட்டது. இதனால் விடுதியில் இருந்தவர்களும் ஏனையோரும் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரமத்தை எதிர் நோக்கி இருந்தனர்.

இந்த நிலையில் மருத்துவமனையின் குடிதண்ணீர் பிரச்சினையை அறிந்த மன்னார் றோட்டறிக் கழகம், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த விக்னேஸ்வரன் கந்தையாவின் நிதியுதவியில் சுத்திகரிப்பு இயந்திரத்தை உடனடியாகத் திருத்துவதற்கு 31 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான காசோலையை மருத்துவமனை நிர்வாகத்திடம் கையளித்துள்ளது. (ம-14,60)

# நல்லூர் கந்தன் ஆலயத்தில் சித்திரத்தேர் வெள்ளோட்டம்!





யாழ்ப்பாணம், ஓக. 25

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் புனருத்தாரணம் செய்யப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் நேற்றுக் காலை பெருமளவான பக்தர்கள் புடைசூழ விமரிசையாக இடம்பெற்றது.

நல்லூரில் பாவனையில் இருந்த தேர் பழுதடைந்த நிலையில் மறைந்த ஷண்முகதாஸ் மாப்பாண முதலியாரால் 1964ஆம் ஆண்டு புதிய தேர் உருவாக்கப்பட்டது. அந்தத் தேரே தற்போது புனருத்தாரணத் திருப்பணி நிறைவுற்று நேற்றையதினம் பக்தர்கள் சூழ அதன் வெள்ளோட்டம் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (ச-27)

# நல்லூர் ஆலய பாதயாத்திரை நயினாதீவில் நேற்று ஆரம்பம்

நல்லூர் நோக்கிய 58 ஆவது திருத்தலத்துக்கான பாதயாத்திரை நேற்று நயினாதீவிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழாவை முன்னிட்டு 58ஆவது வருடமாக இந்த முறையும் இந்தப் பாதயாத்திரை முன்னெடுக்கப் படுகின்றது.

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்திலிருந்து பாதயாத்திரை ஆரம்பமாகி குறிகாட்டுவான், புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, பண்ணை, யாழ்ப்பாணம், வில்லூன்றி, கந்தர்மடம் வழியாக நல்லூரைச் சென்றடைந்தது. (ம-14,125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார்த் தீவின் வளச்சுரண்டலை தடுத்து நிறுத்த ஒன்றிணைவோம்

## பிரஜைகள் குழுத் தலைவர் அழைப்பு

**மன்னார், ஓக. 25**

**மன்னாரில் முன்னெடுக்கப்பட்டுவரும் காற்றாலை மின்கோபுர அமைப்பு நடவடிக்கை மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றால் மிகக் குறுகிய காலத்துக்குள் மன்னார்த் தீவு கடலுக்குள் அமிழும் அபாயம் தோன்றியுள்ளது. இந்த அழிவிலிருந்து நாம் அனைவரும் ஒன்றுபட்டு மன்னார்த்தீவை காப்பாற்ற வேண்டும்.**

இவ்வாறு பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி அ.ஞானப் பிரகாசம் அடிகளார் அழைப்பு விடுத்துள்ளார்.

மன்னாரிலுள்ள பிரஜைகள் குழுவின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது: மன்னார்த்தீவில் இடம்பெற்று வரும் காற்றாலை நிர்மாணப் பணிகளாலும் கனியவள மணல் அகழ்வாலும் எமது எதிர்காலச் சந்ததியினர் பெரும் அவலத்துக்குள்ளாக்கப்படவுள்ளனர்.

மன்னார்த் தீவானது 4 கிலோ மீற்றர் அகலமும் 28 கிலோமீற்றர் நீளமும் கொண்டமைந்துள்ளது. இங்கு மத, இன, பிரதேச வேறுபாடுகளை துறந்து வாழ்ந்து வருகின்றோம். இந்தநிலையில் மன்னார் மற்றும் பூநகரி காற்றாலைத் திட்டத்தை சிறிலங்கா அரசாங்கம் இந்திய நாட்டு அதானி நிறுவனத்துக்கு தாரைவார்த்துக் கொடுக்க முன்வந்துள் ளது. மின்சார சபையும் காற்றாலை மின் உற்பத்தியில் நிலவிவரும் பழுதுகளை சீர்செய்யும் போர்வையில் புதிய திட்டத்தை செயற்படுத்த முனைகிறது.

ஒரு காற்றாலை அமைக்க பத்து ஏக்கர் நிலம் தேவைப்படுகின்றது. மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மூன்றில் இரண்டு பகுதி மக்கள் இந்த மன்னார்த்தீவில் குடிகொண்டுள்ளனர். இதனால் இங்குள்ள மக்களின் வாழ்வாதாரமும் வாழ்க்கையும் அழிக்கப்பட்டு வருகின்றது. எனவே இவை உடனடியாக நிறுத்தப்படாவிட்டால் தொடர்ச்சியாக எதிர்ப்பு நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்க வேண்டும். ஆகவே எமது மன்னார்த் தீவு எதிர்காலத்தில் அழிவு நிலைக்குச் செல்லாது தடுக்க அனைவரும் ஒன்றிணைந்து குரல்கொடுக்க வேண்டும்-என்றார்.

இந்தக் கூட்டத்தில் மன்னார் மாவட்டத்தின் பல அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத் தலங்களின் பிரதிநிதி கள், மதத் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-60)



விஸ்வநாதர் பாடசாலைக்கு

# அதிபரை நியமிக்கக் கோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

விசுவமடு விஸ்வநாதர் ஆரம்பப் பாடசாலைக்கு அதிபர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று கோரி மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் தரம் 1 தொடக்கம் 4 வரையான வகுப்பு மாணவர்களும் தமது கற்றல் நடவடிக்கைகளிலிருந்து இடைவிலகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. விஸ்வநாதர் பாடசாலையில் கடந்த ஒரு வருட காலமாக அதிபரொருவர் இன்மையால் மாணவர்கள் கற்றல் நடவடிக்கை, அபிவிருத்திப் பணிகள் என்பவற்றில் பாதிப்பை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவித்து கடந்த ஜூலை மாதம் 6 ஆம் திகதி, கற்றல் நடவடிக்கையிலிருந்து விலகி அதிபர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்த னர். எனினும் அதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதையடுத்தே மாணவர்கள் நேற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களில் தரம் 1 தொடக்கம் 4 வரையான வகுப்பு மாணவர்கள், தமது பாடசாலைக்கு ஓர் அதிபரை நிய மிக்கும் வரை கற்றல் நடவடிக்கையிலிருந்து இடைவிலகியுள்ளோம் என்றும் தெரிவித்தனர். மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு குறித்த பாடசாலைக்கு அதிபரை விரைவில் நியமிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மாணவர்கள் உட்பட பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், நலன்விரும்பிகள் எனப் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-14,113)

# வர்த்தக நிலையத்தின் கூரை உடைத்து திருட்டு

### *மந்திகையில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஓக. 25

வடமராட்சி- மந்திகை பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் கூரை பிரிக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் மற்றும் பணம் ஆகியவை திருடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குறித்த நிலையத்தை மறுநாள் காலை உரிமையாளர் திறந்து பார்த்தபோது கூரை பிரிக்கப்பட்டு சுமார் 70 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் மற்றும் பணம் ஆகியவை திருட்டுப் போயுள்ளதை அவதானித்துள்ளார்.

இதுதொடர்பில் உரிமையாளர் உடனடியாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-27)

# சட்டவிரோத சிகரெட் விற்பனை: ஒருவர் கைது!

வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட சிகரெட்டை சட்டவிரோதமாக விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார் என்று ஊர்காவற்றுறைப் ,பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட சிகரெட் காரைநகர் பகுதியில் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்படுகின்றது என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் காரைநகரைச் சேர்ந்த சந்தேகநபர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவரிடமிருந்து ஆயிரத்து 200 சிகரெட்கள் மீட்கப்பட்டன, சந்தேகநபர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-14,26)



வளங்கொழிக்க வரம் தருவாய் வேலவனே முருகா!
கடைக்கணித்தால் பொன்குவியும் மாலவனின் மருகா!
நினைத்ததெலாம் நடக்கவைக்கும் வேலவனே முருகா!
அனைத்தையுமே எமக்களிக்கும் மாலவனின் மருகா !
(CR 36869) (3/6)
திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்
சாரங்கா ஜுவலரி
(நியூ சாரங்கா ஜுவலரியும். சாரங்கா நகைமாடமும் ஒரே கட்டடத்தில் இயங்குகின்றது)
வெளிநாட்டு பணப்பரிமாற்ற சேவை
RIA, Western Union, Money gram
Tel : 021 222 6972,
Fax : 021 222 8869
இல.157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail :sarankajewellers@yahoo.com, web : www.sarankajewellers.com



வாழ்க்கை ஒரு நடைப்பயணம் என்பதனை உணர்ந்தோம்
வழிநடந்து வழிநடந்து வருவதென விரைந்தோம்
சூழ்ந்திருக்கும் வளங்களெலாம் வழிப்பயணக் காட்சி
சுடர்வேலன் திருவடியை அடைவது நம் மாட்சி!
(CR 36870) (3/6)
திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்
நியூ வீ.எம்.கே ஜுவல்லரி
இல. 80/03, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2515, 077 784 9369




நீலநிறக் கடலலையின் மேலெழுந்து வருவாய்
நிகரற்ற செஞ்சுடராய்ப் பேரொளியைத் தருவாய்
கோலமயில் மீதிருக்கும் குமரனுனைக் காண்போம்
கொடுந்துயரம் பறந்தகால விரைந்து நடை நடந்தோம்!
திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்
நல்லூர் திருவிழாவை முன்னிட்டு விலைக்கழிவு
05% முதல் 50% வரை
சிற்றி ரெக்ஸ் நல்லூர்
இல. 256, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 221 6185
076 666 3574
(CS 45833) (3/6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவில்

தோற்றம் 25 - 04 - 1950



மறைவு 25 - 08 - 2021

எமது குடும்பத்தலைவர்

## தெய்வத்திரு. கந்தசாமி நரேந்திரன்

(முன்னாள் சாலை முகாமையாளர் - இ.போ.ச, காரைநகர்)

அப்பா!
காலத்தைத் திரும்பிப் பார்க்கும் போது
உங்கள் கைகளை மட்டும்
நினைத்துக் கொள்கின்றோம்
நாம் துயருறும் போது மென்மையாகவும்
தவறு செய்யும் போது கடினமாகவும்
இருந்த உங்கள் கைகள்.
தீ உண்ட தருணத்தில்
மௌனமாக இறுகிப்போயிருந்தன
ஆனால்,
தியாகமும் அன்பும் மட்டும்
எமக்காக எஞ்சியிருந்தன.
மீண்டும் இரண்டு பிஞ்சுக் கைகளில்
புதிதாக உங்களை ஸ்பரிசிக்கும்
நாள் வரையில்...

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 15 • 02 • 1946



இறப்பு 06 • 09 • 2021

## திருமதி நாகேஸ்வரி நடராசா

( ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் )

*திதி: சதுர்த்தசி (25.08.2022)*

எம் நிழல் போல் இருந்தவர் நீங்கள்
நினைவாய் மாறினீர்கள் ! கண் இமைக்கும் நேரத்தில்
கண்ணீர் துளியாக்கினீர்கள்! உங்கள். சிரிப்பும் குரலும் கேட்டு
ஓராண்டானதோ! அன்புடன் அழைக்க நீங்கள்
இங்கில்லை பரிதவிக்கின்றோம் ! வழியொன்றும் காணவில்லை
எமக்கு ஆற்றும் வழிதேடுகின்றோம் ஆறவில்லை எம்
இதயம் உங்கள் நினைவுகள் விட்டு அகலவில்லை.
என்றும் உங்கள் நினைவுகளுடன்

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

கல்லடி ஒழுங்கை,
சாவகச்சேரி.

077 343 1934, 077 530 6300
077 913 0082
0049 1767 0084 152
'. . 001 416 602 0182

(291) (2/6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 27 • 05 • 1934



இறப்பு 23 • 08 • 2022

## திரு. இராசையா இரத்தினம்

யாழ். வரணி நாவற்காட்டைப் பிறப்பிடமாகவும், வரணி கரம்பைக்குறிச்சியை வதிவிடமாகவும் கொண்ட இராசையா இரத்தினம் அவர்கள் 23-08-2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணவேலாயுதர் இராசையா - இராசம்மா தம்பதிகளின் மூத்த மகனும், விநாயகர் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கண்மணி அவர்களின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி (இலங்கை), இராஜவிநாயகம் (இலங்கை), இராஜமனோகரி (இலங்கை), மதிவதனி (இலங்கை), கனகேஸ்வரி (லண்டன்), மதிவாணன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வராஜா (இலங்கை), சிவயோகம் (இலங்கை), பௌற்தேவராஜா (இலங்கை), காலஞ்சென்ற யோகேஸ்வரன், இரட்ணராஜா (லண்டன்), பபிதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, யோகம்மா மற்றும் பூரணம் (ஜேர்மனி), தவமணி, துரைசிங்கம், காலஞ்சென்ற இராஜலட்ஷிமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகிந்தன், கஜேந்தினி, அணிதா, அர்ச்சனா, அகலீசன், தர்ஷிஜா, தர்ஷாலினி, தர்மாலினி, பிறேமிகா, தர்மிகா, ஜனனி, சதிஸ்சன், ஜனார்த்தனி, பஜிதன், பிரகலாதனன், கவிதாஜினி, லகிஷனன், றனுஜன், ரதுஷன், றிஷானா, றிஸ்விதன், அஸ்மிதன் ஆகியோரின் அன்புப் பேரனும்,அபிராம், ஸ்ரீஷா, அஞ்சனா, அஸ்வினா, அகானா, ஆகர்ஷனா, ஆதேஷ், அவினா, அபினவ், அபினாத், ஜமிலா, ஜஸ்மிலா, விருக்ஷா, சந்தோஷன், றைலன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-08-2022) வியாழக்கிழமை மு.ப 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

| | | |
|---|---|---|
| இரத்தினம் மதிவாணன் | - மகன் | : +947 4231 3862 |
| இரத்தினம் கண்மணி | - மனைவி | Mobile : +947 6468 6058 |
| இரத்தினம் மதிவாணன் | - மகன் | Mobile : +495 1184 902266 |
| வதனி | - மகள் | 077 928 5937 |

தகவல்:
குடும்பத்தினர்

(cr 37084) (2/6)

# மரண அறிவித்தல்

பிறப்பு • 16 - 04 - 1961



இறப்பு • 23 - 08 - 2022

## திரு.கணபதிப்பிள்ளை சுதர்சன் (குழந்தை)

(ஈழம் டக்சி உரிமையாளர்)

யாழ். சாவகச்சேரி மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Busswil Bern ஐ வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுதர்சன் அவர்கள் கடந்த (23.08.2022) செவ்வாய்க்கிழமை அன்று சுவிற்ஸர்லாந்தில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தவகுலரட்ணம் மனோன்மணி தம்பதிகளின் அருமை மருமகனும்,மனோறஞ்சினி அவர்களின் பாசமிகு கணவரும்,நிதர்சன், அகர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,அபர்னா, சுலேக்கா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், ஜெகதீஸ்வரன், மனோகரன் மற்றும் பகீரதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,மனோகரி, மனோரதி, மாலினி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும்,லக்சி, சரோன், அஷ்வினி, ஜதீசன், ஆர்யா, அருவி, அதிசயன், வினய், அனன்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2022) வியாழக்கிழமை சுவிற்ஸர்லாந்தில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

| | | |
|---|---|---|
| மனோறஞ்சினி(றஞ்சி) | - மனைவி | Mobile : +41319324384 |
| நிதர்சன்(நிது) | - மகன் | Mobile : +41787300009 |
| அகர்சன் (அஜி) | - மகன் | Mobile : +41795510886 |
| பகீரதன் (பகீர்) | - சகோதரன் | Mobile : +41789193435 |
| சிறீ | - சகோதரன் | Mobile : +41323513794 |

தகவல்: குடும்பத்தினர்
மற்றும்
கனகரத்தினம்
ரமணதாஸ் (தாசன்)
மட்டுவில் வாழ்
நண்பர்கள்.

(CR 37908) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# அமிர்தலிங்கத்தின் பிறந்ததின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 25

தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 95 ஆவது பிறந்த தின நிகழ்வு, சுழிபுரம் வலி.மேற்குப் பிரதேசசபை மண்டபத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், உதயன் குழுமத்தலைவருமான ஈ.சரவணபவன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறீதரன், அராலி சரஸ்வதி வித்தியாலயத்தின் ஆசிரியர் அ.முருகதாசன் ஆகியோர், சிறப்புரைகளை ஆற்றவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா 'இலங்கை அரசியல், பொருளாதார நெருக்கடிகளும் தமிழர் கல்வியும்' என்ற தொனிப்பொருளில் நினைவுப்பேருரை ஆற்றவுள்ளார்.

வரவேற்புரையை வலி.மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் த.நடனேந்திரனும், நன்றியுரையை வலி.மேற்கு பிரதேசசபை உறுப்பினர் ச.ஜயந்தனும் நிகழ்த்தவுள்ளனர். அத்துடன், நிகழ்வில் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் சகோதரரான அப்பாப்பிள்ளை வாசுதேவலிங்கம் கௌரவிக்கப் ப[illegible] யா[illegible]ங்கல் என்பனவும் இடம்பெறவுள்ளன. (ம)

# பனுவல் வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஓக. 25

நல்லூர் சைவத்தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடத்தின் ஏற்பாட்டில் பனுவல் வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதினத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூட இணைத் தலைவர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து.இராதாகிருஷ்ணன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். இதன்போது முனைவர் திருநாவுக்கரசு கமலநாதனின் 'சிந்தனை- சொல்- செயல்' நூல், சைவப்புலவர் சிவஸ்ரீ பால. இந்தியக் குருக்களின் 'இராமாயண பாத்திரங்களின் கவிநயம்' மற்றும் நல்லூரான் கந்தனுக்கு கவி வணக்கம்' ஆகிய நூல்கள் வெளியிடப்படவுள்ளன. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

- முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை – 2020 (பழைய பாடத்திட்டம் - மீள்பரீட்சார்த்திகளுக்கானது)
- முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை – 2020 (புதிய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது **www.codl.jfn.ac.lk** எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 19.09.2022 (திங்கட்கிழமை) ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.**

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**24.08.2022**

(Cr.37913) (2.6)


# ரயில் பயணச்சீட்டு பெறாமல் தப்பியோடிய அலுவலர்கள்!

கிளிநொச்சி, ஓக. 25
யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி யாழ். ராணி ரயிலில் நேற்று முன்தினம் காலை பயணித்த உத்தியோகத்தர்கள் பலர், ரயில் பயணச்சீட்டுப் பெறாமல் பயணித்த நிலையில், அது தொடர்பாகப் பரிசோதகர்கள் சோதனை மேற்கொண்டபோது தப்பியோடியுள்ளனர்.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக, பொதுப்போக்குவரத்தை ஊக்கப்படுத்தும் வகையிலும் அரச அலுவலர்களின் சுமூகமான போக்குவரத்துக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையிலும் யாழ். ராணி ரயில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

குறித்த ரயில் கட்டணம், பேருந்துகளுக்கான கட்டணங்களை விடவும் மிகவும் குறைவாக உள்ள போதிலும், அதையும் செலுத்தாமல் மேற்படி அலுவலர்கள் பயணித்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

சிலர் மூன்றாம் வகுப்புப் பயணச்சீட்டைப் பெற்றுக்கொண்டு இரண்டாம் வகுப்பில் பயணித்தமையும் இனங்காணப்பட்டு அவர்கள் எச்சரிக்கப்பட்டனர். (ம-14,214)




# கொழும்புத்துறை இந்து ம.வி.க்கு திண்மக்கழிவு அகற்றும் தொட்டி!

யாழ்ப்பாணம், ஓக. 25
கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்துக்கு, திண்மக்கழிவு அகற்றும் தொட்டிகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன. நெஸ்லே நிறுவனத்தால், வடமாகாண முறைசாராக் கல்விப் பிரிவினூடாக இந்தத் திண்மக்கழிவுகள் அகற்றும் தொட்டிகள் இலவசமாக வழங்கப்பட்டன. (ம-17)


## நிதி அமைச்சு
## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை

### 2022 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டுக்கான படிவம் II அறிக்கை (பங்களிப்புத் தொகை விபரம்) சமர்ப்பித்தல்

**யாருக்கு ஏற்புடையது**
ஆர்-1 பணம் அனுப்பும் படிவத்தின் மூலம் பங்களிப்புத் தொகை செலுத்தும் தொழில் வழங்குநர்கள்

**இறுதித் திகதி**
2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர்

**ஒப்படைக்க வேண்டிய ஆவணங்கள்**
- சரியாக மற்றும் தெளிவாக பூரணப்படுத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டு அறிக்கை (படிவம் II)
- சாராம்சப் பக்கங்கள்
- இணக்கக் கூற்றுக்கள்

**தங்களது விசேட கவனத்திற்கு**

1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை சட்டத்தின் மற்றும் 1993ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் பிரகாரம் முழுமையான மற்றும் சரியான அறிக்கைகளை உரிய தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் அறிக்கைகளுக்கு தாமதமாகும் ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்காக அறிக்கையில் குறிப்பிடப்படும் ஆறுமாத மொத்தப் பங்களிப்புத் தொகையிலிருந்து 1% தண்டப்பணமாக தொழில் வழங்குநர்களினால் செலுத்த நேரிடும் என்பதையும் தயவுகூர்ந்து கவனத்திற்கொள்ளவும்.

**அறிக்கைகளை ஒப்படைக்க முடியுமான அலுவலகங்கள்**

★ பிரதான அலுவலகம்

முகாமையாளர் - அங்கத்துவக் கணக்கு பாரிய வகை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை
20ம் மாடி, மெகெவர பியெஸ,
நாராஹேன்பிட்டி, கொழும்பு 05.

தொ.இல.: 0117 747216
பெக்ஸ்: 0112 369779

★ கண்டி பிராந்திய அலுவலகம்
(D, E,F) உள்ள ஊ.சே.நி இலக்கங்களுக்கு

பிராந்திய முகாமையாளர் - கண்டி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை
இல.79, வீடமைப்புச் செயலகம்,
யட்டிநுவர வீதி, கண்டி

தொ.இல.: 081 2232446
பெக்ஸ்: 081 2233793

★ கொழும்பு கோட்டை அலுவலகம்

ஊ.ந.பொ.நி. அலுவலகம்
இல. 85, சீ பேன்க்,
ஹேமாஸ் கட்டிடம், யோர்க் வீதி,
கொழும்பு 01.

தொ.இல. : 0112 321184
பெக்ஸ் : 011 2321184

★ ஹம்பாந்தோட்டை பிராந்திய அலுவலகம்
(G,H,W) உள்ள ஊ.சே.நி.இலக்கங்களுக்கு

பிராந்திய முகாமையாளர் - ஹம்பாந்தோட்டை
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை
இல.57, வில்மட் வீதி,
ஹம்பாந்தோட்டை.

தொ.இல. : 047 2222462
பெக்ஸ் : 047 2222460

தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை**


# மயிலிட்டி, குருநகர் மீனவர்களுக்கு ம. எண்ணெய்

யாழ்ப்பாணம், ஓக. 25
நீண்டகாலத்துக்குப் பின்னர் மயிலிட்டி மற்றும் குருநகர் கடற்றொழிலாளர்களுக்கு மண்ணெண்ணெய் நேற்று முன்தினம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

அதற்கென காங்கேசன்துறையிலிருந்து பவுஸர்கள் மூலம் மண்ணெண்ணெய் எடுத்துவரப்பட்டுள்ளது.

இதேவேளை இதுவரை காலமும் 87 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை தற்போது 340 ரூபாவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-9)


உ
ஓம் சக்தி

"வசந்தபுரம்"
களபாவோடை, ஏழாலை தெற்கு, ஏழாலை.
**ஸ்ரீ வசந்த நாகபூசனி அம்மாள் தேவஸ்தானம்**

## மஹா கும்பாபிஷேகம்
## 28.08.2022

எதிர்வரும் **(28.08.2022)** ஞாயிற்றுக்கிழமை காலை **8.30** மணிக்கு **4 அடி உயரமான ஐம்பொன்னால் புதிதாக அமைக்கப்பட்ட முருகனுக்கான மஹாகும்பாபிஷேகம்** இடம்பெறவுள்ளது. முதல்நாள் சனிக்கிழமை காலை 8.30 - 11 .30 மணிவரையும், மாலை 3.00 - 6.00 மணிவரையும் அடியவர்கள் **பாற்காப்புச் சாத்த** முடியும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

(cs.20407) (2.6)
**நி.வசந்தகுமாரி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ராஜபக்சக்களின் பாதையில் ரணில்


ராஜபக்சக்களின் அரசாங்கத்துக்கும், ரணில் அரசாங்கத்துக்குமிடையே குறைந்தபட்சம் ஆறு வித்தியாசங்களைச் சொல்லமுடியுமா? ராஜபக்ச அரசாங்கம் டொலர் கையிருப்பைத் தக்கவைப்பதாகச் சொல்லி பழங்கள், உள்ளாடைகள் உட்பட நூற்றுக்கணக்கான பொருட்களின் இறகுமதியைத் தடை செய்தது, நாணயத்தாள்களை கட்டுமேனிக்கு அச்சிட்டுத் தள்ளியது, பொருள்களின் அதியுச்ச விலையேற்றத்தைக் கண்டும்காணாமல் இருந்தது, நாடே அழிந்தாலும் கூட இன்னொரு தேர்தலை வைக்கமாட்டோம் என அடம் பிடித்தது, சர்வதேசத்தைக் கோபமூட்டக்கூடிய நடவடிக்கைகளை முன்னெடுத்தது, நாளுக்கொரு நடைமுறை என்று வர்த்தமானிகளை அச்சிட்டு வெளியிட்டுக்கொண்டே இருந்தது என்று ராஜபக்ச அரசாங்கம் செய்த அத்தனை காரியங்களையும் ரணில் அரசாங்கமும் அப்படியே கைக்கொண்டு வருகின்றது. வேண்டுமானால், எரிபொருள் வரிசையையும், போராட்டக்காரர்களையும் ரணில் இல்லாமலாக்கியமையை இவ்விரு அரசாங்கங்களுக்கும் இடையிலான ஒரேயொரு வேறுபாடாகச் சொல்லலாம். மற்றும்படி, இலங்கையின் பொருளாதாரமோ, மக்களின் வாழ்க்கைத்தரமோ, பொருள்களின் விலையேற்றமோ கிஞ்சித்தும் மீண்டெழவில்லை. மாறாக இன்னும் அவை அச்சுறுத்தும் வகையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் சாத்தியங்களுக்கான கதவுகளை ரணில் அரசாங்கம் அகலத் திறந்துவிட்டிருக்கிறது.

'எரிபொருள், எரிவாயு வரிசைகளையும், போராட்டக்காரர்களையும் இல்லாதாக்கிவிட்டால், எல்லாமே சுபமாக முடிந்து விடும், நாம் நிம்மதியாக ஆட்சியதிகாரத்தை அனுபவிக்க முடியும்' என்று ரணில் எண்ணுகிறார் போலும். அதனால்தான் இவ்விரு விடயங்களுக்கும் அதிமுக்கியத்துவம் கொடுக்கிறார் அவர். ஆனால் ரணில் போடுவது தப்புக்கணக்கு என்பதை, அவரின் தவறான முடிவுகளால் உருவாகப்போகும் நெருக்கடிகள் விரைவிலேயே உணர்த்தும். 'அமைதியான வழியில் போராடியவர்கள்தான் உண்மையான போராளிகள். அதனை வன்முறை வழிக்குத் திருப்பியோரே கலகக்காரர்கள். அவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவேன்' என்று கூறிக்கொண்டே போராட்டக்காரர்கள் மீதான தன் வேட்டையை ரணில் நியாயப்படுத்த முனைகின்றார். அரசகட்டடங்களின் முன் 'செல்பி' எடுத்தவர்களைக் கூட 'போராட்டத்தை வன்முறைப் பாதைக்கு இட்டுச் சென்றவர்கள்' என்ற பட்டியலுக்குள் உள்ளடக்கி கைது செய்யப்படுகின்றார்கள். இனிமேல் ஏதேனும் அரச எதிர்ப்புப் போராட்டம் என்று சொன்னாலே, அதில் கலந்துகொள்ளும் எண்ணம் எவருக்குமே வரக்கூடாது என்பதற்காகவே இந்த அச்சமூட்டும் நடவடிக்கைகளை ரணில் அரசாங்கம் மேற்கொள்கின்றது. ஆனால், உண்மையில் மக்களின் அமைதியான போராட்டங்களுக்குள் புகுந்து, அதைக் கலவரமாக மாற்றிய ராஜபக்ச தரப்புச் சமூகவிரோதிகள் இன்னமும் சுதந்திரமாகவே திரிகின்றனர். அவர்களில் சிலருக்கு அமைச்சுப் பதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. எனவே ராஜபக்ச அரசாங்கத்தின் மக்கள் விரோதச் செயற்பாடுகளைக் கண்டித்த மக்களை கைது செய்வதையே தன் இலக்காகக் கொண்டுள்ள ரணில், மறுபுறத்தில் ராஜபக்சக்களையும், அவர்களின் அடியாள்களையும் எந்தச் சேதாரமும் இல்லாமல் பாதுகாக்கவும் செய்கின்றார்.

இன்னொருவகையில் சொன்னால், ராஜபக்சக்களின் ஆட்சியையே அவர்கள் விட்ட இடத்தில் இருந்து ரணில் தொடர்கிறார். ராஜபக்சக்கள் ஆட்சியதிகாரத்தில் இருந்தால் கூட, தமது குடும்பத்தைக் காப்பாற்ற ரணில் அளவுக்கு கண்ணும் கருத்துமாக இருந்திருப்பார்களா என்பது சந்தேகமே. அந்தளவுக்கு ராஜபக்சக்கள் கொடுத்தற்கும் மேலாகக் கூவிக் கொண்டும், செய்துகொண்டும் இருக்கிறார் ரணில். மாணவர் தலைவரான வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 90 நாள்கள் தடுத்து வைத்து, விசாரிக்க ரணில் அனுமதி வழங்கியதன் மூலம் சர்வதேசத்தின் கோபத்தை மீண்டுமொருமுறை சம்பாதித்திருக்கிறார். ஆனால் அந்தக் கோபத்தை ரணில் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. ஏற்கனவே சீனச் செய்மதிக்கப்பலை அம்பாந்தோட்டைக்குள் அனுமதித்ததால் இலங்கை மீது உள்ளூர வன்மத்தோடு இருக்கும் அமெரிக்காவும், இந்தியாவும் ரணிலின் 'பயங்கரவாதத் தடைச்சட்ட' அனுமதியை வைத்துக்கொண்டு, ஜெனிவாவில் கடுமையான அழுத்தங்களைக் கொடுக்கக்கூடும். அத்தோடு நில்லாமல் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையிலும் கைவைக்கும் வாய்ப்புகளும் அதிகம். ஏற்கனவே பொருளாதார நலிவில் இருக்கும் இலங்கை இவ்வாறான சர்வதேச அழுத்தங்களைத் தாங்குமா என்பது கேள்விக்குறியே. ராஜபக்சக்களைப் போலவே ரணில் எடுக்கும் தவறான முடிவுகளால், உலகில் உணவுப்பணவீக்கத்தில் 5 ஆவது இடத்தில் இருக்கும் இலங்கை வெகு விரைவில் முதலிடத்துக்கு முன்னேறினாலும் ஆச்சரியமில்லை. நாடும், மக்களும் நாசமானாலும் பரவாயில்லை, அரசியல்வாதிகளுக்கு அதிகாரம் தானே முக்கியம்.

## நாளொரு நல்வார்த்தை

"மனிதன் புலியைக் கொன்றால் அது வேட்டை, புலி மனிதனைக் கொன்றால் அது மிருகத்தனம். குற்றத்துக்கும் நீதிக்குமிடையே உள்ள தொடர்பு இதனைப் போன்றதுதான்" - **பெர்னாட்ஷா**



# சர்வதேச ஆதரவைப்பெறும் அமைச்சரவைதான் தேவை!

*பவ்ரல் அமைப்பு ஜனாதிபதிக்குக் கடிதம்*

**கொழும்பு, ஓக. 25**

**புதிய அமைச்சரவையை நியமிக்கும்போது ஊழல் மோசடி, செயற்றிறன் மற்றும் சட்டத்தின் ஆட்சி போன்ற விடயங்களுக்கு முகம்கொடுக்க முடியுமானவர்கள் மற்றும் சர்வதேச நாடுகளின் ஆதரவை பெற்றுக்கொள்ளக்கூடியோரை அமைச்சர்களாக நியமிக்கவேண்டும் என பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.**

PAFFREL

புதிய அமைச்சரவை நியமனம் தொடர்பாக பவ்ரல் அமைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:-

நாடு தற்போது பெரும் பொருளாதார மற்றும் அரசியல் உறுதியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. நாட்டை உறுதியான நிலைக்குக் கொண்டுசெல்ல, அமைச்சரவையின் நடவடிக்கை மிகவும் தீர்மானமிக்கதாக இருக்க வேண்டும். அதேபோன்று தேசிய மற்றும் சர்வதேசத்தின் நம்பிக்கை மற்றும் நற்பெயரை கட்டியெழுப்புவதற்கும் இந்தப் புதிய அமைச்சரவை நியமனம் கவனம் செலுத்த வேண்டும். மக்களின் அதிருப்திக்கு ஆளாகியவர்களுக்கு அமைச்சுப்பதவி வழங்கக் கூடாது.

அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களை நியமிக்கும்போது, அதன் எண்ணிக்கை 20 க்கு மேற்படாதவகையில் வரையறுக்கவேண்டும். அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் அத்தியாவசிய செலவுகள் தவிர ஏனைய செலவுகளை இல்லாமலாக்கவேண்டும். அமைச்சரவை நியமனத்தின்போது அரசியல் இருப்பு மற்றும் உறுதித்தன்மையை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் மேற்கொள்ளப்படாவிட்டால் ஒட்டுமொத்த நாடும் அழிவை நோக்கியே பயணிக்கும் - என்றுள்ளது.

(ச-இ)

# கொரோனாவின் பாரதூரம் புறக்கணிக்கப்படுகின்றது

*பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சங்கம் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஓக. 25

நாட்டில் தற்போது கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளபோதும், அதனால் ஏற்படக் கூடிய பாரதூரத் தன்மை புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

மக்களுக்கு வழங்கப்பட்ட தடுப்பூசி மூலம் நோய் எதிர்ப்பு சக்தியால் கொரோனாத் தொற்று ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டது. மீண்டும் தொற்றுப் பரவல் தீவிரமடைந்தால் அது எந்தநேரத்திலும் பேரழிவை ஏற்படுத்தலாம். இது தொடர்பில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தவில்லை. கொரோனாப் பரவல் எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் சமூகத்தில் அடிமட்ட மட்டத்திலிருந்து அதிகரித்துள்ளது. தற்போது, எந்தவொரு சுகாதார வழிகாட்டுதல்களும் ஆலோசனைகளும் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை - என்றார். (எ-இ)

## நாளை

26.08.2022
வெள்ளிக்கிழமை
ஆவணி 10

சுபநேரம் : 06.05 - 07.35
ராகுகாலம்: 10.35 - 12.05

நல்லூர் கந்தசுவாமி தீர்த்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Allianz

# அலியான்ஸ் வருடாந்த விருது வழங்கள் விழா 202

அலியான்ஸ் ஸ்ரீலங்காவின் தனது வருடாந்த விருது வழ விழாவை 2022 ஆகஸ்ட் 16 அன்று Monarch Imperial இல் க்கும் மேற்பட்ட அழைப்பாளர்கள் மற்றும் விருது வென்றவர் பங்கேற்புடன் நடத்தியது. எங்கள் விற்பனை சூப்பர் ஸ்ட அவர்களின் பங்களிப்புகள் மற்றும் சிறந்த செயல்திறன்களு கௌரவிக்கப்பட்டனர் மற்றும் எங்கள் வாடிக்கையாளர்க சேவை செய்வதில் அவர்களின் உன்னதமான முயற்சிகளு வெகுமதி அளிக்கப்பட்டனர்.

"விங்ஸ் ஆப் க்ரோத்" என்ற தொனிப்பொருளின் கீழ் விருதுகள் நடைபெற்றன, இதில் அலியான்ஸ் இன்சூரன்ஸ் லிமிடெட் மற்றும் அலியான்ஸ் லைப் இன்சூரன்ஸ் லிமிடெட் ஆகியவற்றிலிருந்து 157 சிறந்த விற்பனையா கழுகு மனப்பான்மையைக் கடைப்பிடித்து உ.ற்சா வாடிக்கையாளர்களுக்கான சேவையை வழங்கியத பரிசுகளைப் பெற்றனர்.

இவ் விருது வழங்கும் விழாவிற்கு அலியான்ஸ் ஸ்ரீலங்கா தலைவர் அலன் ஸ்மி, பிரதம அதிதியாக கலந்துகொண்ட அலியான்ஸ் ஸ்ரீலங்காவின் பணிப்பாளர் / பிரதம நிறை அதிகாரி கான் சுப்ரமணியம், அலியான்ஸ் லைப் இன்சூ லங்கா லிமிடெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அ ஜெயபலால் ஹேவாவசம், விற்பனை முகாமை உறுப்பினர்கள், சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் தலைமை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

வெற்றியாளர்களின் செயல்திறனுக்காக அலியான்ஸ் ஸ்ரீ நிர்வாகமானது வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன், வருடங்களாக எம்மீது நம்பிக்கை வைத்து இந்த மா சாதனைக்கு காரணமாக இருந்தமைக்காக எமது பெறுமதி வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவி விரும்புகிறது.


ஆலன் ஸ்மீ - தலைவர் அலியான்ஸ் ஸ்ரீலங்கா


கான் சுப்ரமணியம்,
பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி,
அலியான்ஸ் ஸ்ரீலங்கா


ஜெயபலால் ஹேவாவசம்,
பிரதம நிறைவேற்று அதிகாரி, அலியான்ஸ்
லைப் இன்சூரன்ஸ் லங்கா லிமிடெட்


மங்கள பண்டார
தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரி


டென்னிஸ் ஜெராகப,
தலைமை விற்பனை அதிகாரி


ரங்க டயஸ்,
தலைமை விற்பனை அதிகாரி
(பெருநிறுவன)


S.D.S. கருணாதிலக்க


S.A. குணவர்த்தன


M.S.S. பெரேரா


W.P.S.D. விக்கிரமசிங்ஹே


P. பிரிந்தாபன்


R.A.K. விதுரங்க


M.D.M. [illegible]


T.S.P. பெர்னாண்டோ


E. ஜெரசன்


H.M.S. ஹிட்டநாயக்க


R.S.P. ரஞ்சித்


S. கபிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை நா.க.குமாரசூரியர்

# நல்லை நாயகனுக்கு இன்று தேர்



வரலாற்றுப்பெருமையும் ஆன்மிகச் சிறப்பும் கொண்டது நல்லூர்ப் பிரதேசம். தமிழ் மன்னர்களின் ஆட்சிக் காலத்தின் போது இராதானியாக விளங்கிய பெருமை நல்லூர்ப் பிதேசத்துக்கு உண்டு. சைவத்தையும் தமிழையும் போற்றிப் பாதுகாத்து வந்த ஆறுமுகநாவலர் போன்ற அறிஞர்கள், ஞானிகள், சித்தர்கள் என்போர் பிறந்து, வாழ்ந்து, சிறப்பித்த இடமாக நல்லையம்பதி விளங்குகின்றது. இத்தகைய சரித்திரப் பிரசித்திபெற்ற தமிழ் மண்ணாம் யாழ்ப்பாணத்தில், அலங்காரக் கந்தனாகப் பன்னெடுங்காலமாக கோயில்கொண்டெழுந்தருளி அருளாட்சி செய்துவரும் நல்லைக்கந்தனின் தேர்த்திருவிழா இன்று பல்லாயிரம் பக்தர்கள் புடைசூழ கோலாகலமாக நடைபெறுகின்றது.



தமிழ்த்தெய்வமாம் முருகனுக்கு தமிழ் மக்கள் வதியும் இடமெல்லாம் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. நல்லூர், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, கதிர்காமம், மண்டூர், சித்தாண்டி, வெருகல் முதலிய புண்ணிய தலங்களில் முருகப்பெருமான் கோயில் கொண்டெழுந்தருளி அருள்புரிந்து வருகின்றார். நல்லைக்கந்தன் ஆலயத்துக்கு ஒரு தனிச்சிறப்புண்டு. இங்கு எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் அலங்காரக் கந்தனாகப் போற்றப்படுகின்றார். முருகப்பெருமானின் அருட்பொலிவும் தெய்வீகத்தன்மையும் நல்லூரின் சிறப்புக்களுக்கு அணிசெய்வதாக இருப்பதைக் காணலாம். அழகே உருவான கந்தனாக நல்லையம்பதியில் எழுந்தருளியிருந்து தன்னை விரும்பித்தொழும் அடியார்களுக்கு நல்லருள் புரிகின்றார் எல்லோரையும் வாழ வைக்கின்றார்.

**விழாக்கோலம்**

நல்லை நாயகனின் பெருவிழாவான இன்று யாழ். நகரம் முழுவதுமே விழாக்கோலம் பூண்டிருக்கும். நல்லைநகர் வீதிகள் எல்லாம் சோடனைகள் பூண்டு புனித நகராகக் காட்சியளிக்கும். இன்றைய தேர்த்திருவிழாவன்று நல்லைக்கந்தன் தேரேறி வந்து அடியார்களுக்குக் காட்சி கொடுக்கின்ற காட்சியை நேரில் கண்டு அருட்கடாட்சத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கைத் திருநாட்டிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் நல்லைம்பதியில் கூடுவார்கள். முத்தமிழால் வையத்தாரையும் வாழவைக்கின்ற முருகன் இன்று சித்திரத்தேரிலே அழகுத் திருக்கோலமாக பவனி வருகின்ற காட்சிகளைக் காணக் கண்கள் கோடிவேண்டும்.

அங்கப்பிரதிஷ்டை, அடியளிப்போர் ஒருபுறம், முருகன் திருப்புகழ் பாடுவோர் ஒருபுறம், பஜனைப் பாடல்கள் பாடுவோர் ஒருபுறம், தேர்வடம் பிடிப்போர் ஒருபுறம் இப்பேற்பட்ட அற்புதக் காட்சிகளின் மத்தியில் ஆறுமுகப்பெருமான் சித்திரத்தேரில் பவனிவருகின்ற உற்சவத்தை நேரில் பார்ப்பவர்கள் பெறுதற்கரிய பெரும்பேறு பெற்றவர்களாவார்கள்.

**தெய்வீகத்தன்மை**

அடியார்கள் 'அரோகரா, அரோகரா, முருகா, ஓம் முருகா' என முருகப்பெருமானின் பாடல்களைப் பாடியும் ஆடியும் வருகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். தேரில் வலம்வரும் முருகப்பெருமானை ஒருமுறையாவது கண்ணாரக்கண்டு தொழவேண்டும் என்ற பக்திப்பரவசத்துடன் அடியார்கள் இன்று காத்திருப்பார்கள். நல்லூர் நாயகனை நல்மனத்தோடு நாம் பணிந்தால் நல்லமயில் ஏறிவந்து காட்சி கொடுக்கும் இன்ப நாளிது. இன்று அக்களிப்போம் அகமகிழ்வோம்.

நல்லூர் கந்தன் அருளாட்சி அகிலமெங்கும் பெருகிட பிரார்த்திப்போம்



காலத்தை வெல்லும் கலை நுட்பத்துடன் மின்னும் பொன் நகையால்
மேலும் உங்கள் புன்னகை ஒளிரும். விரையுங்கள்
நியூ மைதிலி மற்றும் சந்தோஷ் இற்கு




நடராசா கஜந்தன்
நியூமைதிலி
ஜுவலர்ஸ்
ஸ்தாபனத்தின் மற்றுமொரு கிளை ஸ்தாபனமாக




நடராசா கஜந்தன்
சந்தோஷ்
ஜுவல்லர்ஸ்



ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்

இல. 97A, 99V மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். இல. 38, 40, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
Tel : 021 221 1177 Tel : 021 221 7878 Fax : 021 221 7877

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YARL SMART WATER SOLUTION

"Smart Water, Smart Life"

நீர் சுத்திகரிப்பு தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வாக நாங்கள்.

## எமது வாடிக்கையாளர்களுக்கான அரிய வாய்ப்பு.

நீங்கள் உங்கள் அயலவர்கள். நண்பர்களுக்கு எமது நிறுவனத்தைப்பற்றி தெரியபடுத்தி அவர்களும் எமது Water Filter பொருத்தினார்கள் என்றால் அன்பான வாடிக்கையாளரான உங்களுக்கு 1 வருடத்திற்குரிய Sediment Fillter (6ps ) இலவசம்.

021 430 0044 /076 666 5267





YARL SMART (Pvt) Ltd
No.341 K.K.S Road, Jaffna.
yarlsmartwater@gmail.com
www.yarlsmartwater.com



# Yarl Smart PARTY

இல்லங்கள், மண்டபங்களில் நடைபெறும் மங்கள நிகழ்வுகளை மனம் போல் மாற்ற...




வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வியாபார ஸ்தாபனங்களின் விளம்பரங்களை சிறந்த முறையில் உருவாக்கிட எமை நாடுங்கள்.. அத்துடன் வர்த்தக விளம்பரங்களை தொலைக்காட்சிகள் வானொலிகளில் ஒலி ஒளி பரப்பிட உடன் அழையுங்கள்.

076 624 3205 I 076 919 9989

youtube channel :- smartparty

SMART PARTY
"happy home, happy life"
No. 319, KKS Road, Jaffna
TP:- 021 430 0045 | 076 919 9989


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நாதனுக்கே நாதன் வேலவனே

கல்லான நெஞ்சம் கரையுமே
கந்தாவுன் கருணை கண்டு
சென்னி முதல் கழல்கள் ஈறாய்
உள்ளம் உருகி உன்றன்
மகா உற்சவங் காண
பற்பல பக்தர்கள் விழாக்காட்சியை
நேரடியாய் நேரலையாய் களித்திட
பஞ்சம் பசி பஞ்சாய் பறந்திட
கொரோனா அசுரன் மாண்டிட
நீதி நியாயம் என்றுமே ஓங்கிட
சடுதியாய் ஓடியே வந்திடய்யா
நாதனுக்கே நாதன் வேலவனே

எஸ்.உமாசிவம்
ஏழாலையம்பதி

## வேண்டுதல் கேட்கிறதா நல்லைக்கந்தா

ஆண்டுகள் பல கடந்தும் மாண்டது எம் வாழ்வு
ஆண்டாண்டாய் நீ மட்டும் அலங்காரத் தேர்ப்பவனி
வேண்டுதல் கேக்கிறதா நல்லைக்கந்தா நாம்
பூண்டிடும் பக்தியில் குறைவேதும் உண்டா
மாண்ட எம் வாழ்வது மீண்டிடவே என்றும்
ஆண்டவனே உனது வேலது காத்திடட்டும் எம்மை



புலோலியூர்
வேல்நந்தன்

பிரார்த்திப்போம்
KANESAN STORES
கணேசன் ஸ்ரோஸ்
Wholesale & Retails Dealers in Textiles

201 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
K.K.S. Road, Jaffna.
Tel: 021 2222 830 077 445 7344

## தொல்லை தவிர்த்தாள்வாய்!

வான்சுமந்த வானவர்கள்
மமதையதற் காளாகி
ஊன் சுமந்த வாறதுபோ
லுன் தமிழர் தான்புகுந்து
தொல்லை
தவிர்த் தாள்வாய்
தொடர்ந்து!

த. நாராயணன்

நல்லூர் கந்தன் அருளாட்சி
அகிலமெங்கும் பெருகிட
பிரார்த்திப்போம்
வினோ நகைப் பூங்கா

தங்க வைர நகை வியாபாரம்
Vino Nakai Poonka
Gold & Jewel Merchant
அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
185 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Kasthuriar Road, Jaffna.
Tel: 021 222 5394 / 021 222 9494,
Fax:021 222 2824

நல்லூரரான் தேர்த்திருவிழா சிறப்புற பிரார்த்திக்கின்றோம்
50 வருடங்களுக்கு மேலாக யாழ் குடாநாட்டு மக்களின் நன்மதிப்பைபெற்ற உங்கள் அபிமான

மைதிலி
நகைமாடம்
தனியார் நிறுவனம்
89V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 7902
Maithily Nakai Maadam (Pvt) Ltd


என்றும் மங்கிடா
தரம் குன்றிடா
தங்க நகைகளின்
சாம்ராஜ்யம்
யாழ் மைதிலி ஜுவெலர்ஸ்
79 Z, Sea Street, Colombo-11. Tel: 2396239.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்லூர் கந்தன் திருவருள் பக்த அடியார்களின் உள்ளம் நிரம்பிட பிரார்த்திப்போம்



# உதயா ஜுவல்லர்ஸ்






- அதி நவீன டிசைனுக்கேற்ப நம்பமுடியாத விலைக்கழிவுகள் வழங்கப்படும்.
- குறிப்பிட்ட நகைகள் தங்க விலைக்கே சேதாரம் இல்லாமல் வழங்கப்படும்.


79G கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Email-uthayaa Jewellerss@gmail.com
Facebook - uthayaa Jewellerss
T.P. No - 074 069 4449 / 021 222 4434

---

LINGAA Fashion
லிங்கா பெஷன்

நல்லூர் அலங்காரக் கந்தன் உற்சவ காலத்தில்
புத்தாடை புது வரவுகளை



# 10 - 50% வரை

விலைக் கழிவுகளுடன்
அள்ளிச் செல்ல இன்றே விரையுங்கள்.



நல்லூரில் ஆடைகளின் சாம்ராஜ்யம்

## லிங்கா பெஷன்

Whatsapp - 076 644 0722
Tel : 021 221 4999
www.lingaa.lk
www.fb.com / lingaa.lk
No. 302A, TEMPLE ROAD, NALLUR, JAFFNA.

(CR 37056) (3/6)

---

நல்லூர் கந்தன் அருளாட்சி அகிலமெங்கும் பெருகிட பிரார்த்திப்போம்

யாழ். நகர் மத்தியில் அதி நவீன வசதிகளுடன் கூடிய
தங்குமிட விடுதி


# HOTEL LOVUSIYAH



சினேகபூர்வமான முன்னணி சேவை







42, Clock Tower Road, Jaffna. T- 021 222 1326, 021 222 1327, 077 821 0122
www.hotellovusiyah.lk
hotellovusiyah@gmail.com

---

உங்கள் கட்டுமான வேலைகளுக்கு அனுபவம்வாய்ந்த நிபுணர்களின்
ஆலோசனையுடன் உங்கள் கட்டுமான பணிகளை நிறைவேற்றிக்கொள்ள

# NEW RAM CONSTRUCTION &
# THAYAN BUILDING MATERIALS SUPPLIERS

No.263, Navalar Road, Jaffna. Hotline: 077 634 1525

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லமை தாராயோ முருகா

பச்சை மயிலேறி பவனி வரும்
கச்சை அணிந்து பழனியப்பன்
காட்சி கொடுக்கும் கந்தா
நாதனுக்கே நாதனாகிய எங்கள்
சுவாமி நாதா தேவர்களுக்கே
தேவனாகிய தேவ சேனாதிபதியே
உன்றன் திருநாமங்கள் ஒன்றா
இரண்டா நாம் அழைக்க
தினம் தினம் உன் திருக்காட்சி
காண என்றுமே எனக்கு சடுதியாக
வல்லமை தாராயோ முருகா

எஸ்.உமாசிவம், ஏழாலையம்பதி

## புகழ்மணக்கும் தலமிது

குக்குடக்கொடி பறக்குது நல்லூரில்
நெக்குருகி மாந்தரெல்லாம் முருகநாமம்
பக்குவமாய் உச்சரித்து ஆடிப்பாடிடும்
திக்கெல்லாம் புகழ்மணக்கும் தலமிதுவே



வே.கிருஷ்ணானந்தன்






நல்லூர் கந்தன் அருளாட்சி அகிலமெங்கும் பெருகிட
பிரார்த்திப்போம்

ஸ்ரீ சிவாஞ்சனா ஜுவல்லறி
SRI SIVANCHANA JEWELLERY
தங்கப்பவுண் நகை வியாபாரம்
*Menufacture in Gold Jewells*





149-A கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Kasthuriar Road, Jaffna.
Tel: 021 222 9227 / 077 711 0220






தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்
*New image of Constrution at Jaffna.*

JAFFNA.COM
WWW.GIFTSTOJAFFNA.COM
www.prlanka.com
prlanka.lk@gmail.com

PRLANKA
Engineering (PVT) LTD.
No.30A, Manchathadi Road, Inuvil East
077 220 8349, 076 906 5911, 077 200 2141



# வீடு, காணி வியாபாரம் வாங்க விற்க

நம்பிக்கையுடன் நாடுங்கள் நட்பான
முழுநேர விற்பனை முகவர்

THINKING OF BUYING SELLING OR RENTING
HOMES AND LAND IN SRI LANKA



உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான RE/MAX 2018 இருந்து யாழ். மண்ணில்

DIVAKAR THAVAVINAYAKAN
Real Estate Sales Representative
+94 77 221 6683
divakar@remaxnorth.lk

RE/MAX NORTH REALTY
Each office independently owned and operated
+94 77 566 0000 +94 21 468 0780
111C Kannathiddy Rd, Jaffna
www.remaxnorth.lk





NSR HALL

NSR WEDDING HALL and ROOMS

நவீன வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட மண்டப வசதி
திருமணம், பிறந்தநாள், பூப்புனித நீராட்டு விழா,
ஒன்றுகூடல்கள், ஏனைய பொது நிகழ்வுகள்,

இல.01, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 222 4452, 021 221 1332,
021 221 7786, 021 222 2709



நடராஜா பரமேஸ்வரி
திருமண மண்டபம்

465,26, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
(மனோன்மணி அம்மன் ஆலயம் அருகாமையில்)
தொ.பே - 021 222 1662, 021 222 2709





40 வருடகால அனுபவமிக்க கைராசியான நிறுவனம்...




SN சிறிநதியா
அழகிய தங்க நகைகளின் சாம்ராட்சியம்
நகை மாளிகை

யாழ் மண்ணில் பிரமாண்ட
காட்சியறை சிறிநதியா
நகை மாளிகை

இல.01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2709










இல.131, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2809


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையுடன் நாடுங்கள் நட்பான
முழுநேர விற்பனை
முகவர்கள் ஒரே முகவரியில்

**THINKING OF BUYING, SELLING OR RENTING HOMES AND LAND IN SRI LANKA**

50 வருட காலம் ரியல் எஸ்டேட் துறையில்
உலகின் No1 நிறுவனமான
RE/MAX 2015ல் இருந்து இலங்கையில்

யாழ்ப்பாணத்தில் — 2018
RE/MAX NORTH REALTY
Each office independently owned and operated.
111C Kannathiddy Rd, Jaffna
+94 77 566 0000
+94 21 468 0780
info@remaxnorth.lk
www.remaxnorth.lk

கொழும்பில் — 2021
RE/MAX NEXUS REALTY
Each office independently owned and operated.
+94 77 019 0000
+94 11 447 7003
143C Hendala Road, Wattala
www.remaxnexus.lk
info@remaxnexus.lk

திருகோணமலையில் — 2022
RE/MAX NOBLE REALTY
Each office independently owned and operated.
135A, Inner Harbour Rd,
Orr's Hill, Trincomalee
+94 76 624 0000
www.remaxnoble.lk
info@remaxnoble.lk




தமிழனின் நிறுவகத்தில்

அனைவருக்கும் நல்லூர் கந்தனின் ஆசியும் அருளும் கிடைக்கட்டும்
என எமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

50 வருட காலம் ரியல் எஸ்டேட் துறையில்
உலகின் NO1 நிறுவனமான RE/MAX 2018 இருந்து யாழ் மண்ணில்

வீடு காணி வியாபாரம் வாங்க விற்க நம்பிக்கையுடன் நாடுங்கள்
நட்பான முழு நேர விற்பனை முகவர்கள் ஒரே முகவரியில்

**THINKING OF BUYING OR SELLING OR RENTING HOMES AND LAND IN SRILANKA**


Sarmilin Rajeevan
Real Estate Sales Representative
+94 77 227 6498
sarmilin@remaxnorth.lk


Nitharsan Antonrasa
Real Estate Sales Representative
+94 77 222 0243
nitharsan@remaxnorth.lk


Subash Meshak Nimron
Real Estate Sales Representative
+94 77 221 6795
meshak@remaxnexus.lk


Sajitha Sithiravel
Real Estate Sales Representative
+94 74 002 2113
sajitha@remaxnoble.lk

யாழ்ப்பாணத்தில்
RE/MAX NORTH REALTY
111C Kannathiddy Rd, Jaffna
+94 77 566 0000
+94 21 468 0780
info@remaxnorth.lk
www.remaxnorth.lk

கொழும்பில்
RE/MAX NEXUS REALTY
+94 77 019 0000
+94 11 447 7003
143C Hendala Road, Wattala
www.remaxnexus.lk
info@remaxnexus.lk

திருகோணமலையில்
RE/MAX NOBLE REALTY
135A, Inner Harbour Rd,
Orr's Hill, Trincomalee
+94 76 624 0000
www.remaxnoble.lk
info@remaxnoble.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் நடராஜா கனகலிங்கம்

(மர அரிவுகாலை, மரக்காலை உரிமையாளர்)



தோற்றம் 28.06.1954 மறைவு 06.09.2010

குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து
அன்போடும் பண்போடும் பழகி
எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்து
இன்று வானுறையும் தெய்வமாகி விட்ட
உங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பிரிவால் துயருறும்
மனைவி மற்றும் பிள்ளைகள்
42/1, அராலி வீதி, ஓட்டுமடம்.

# மரண அறிவித்தல்

## பொன்னுச்சாமி யோகேஸ்வரன்

(மலேரியா தடுப்புபிரிவு உத்தியோகத்தர் – யாழ்ப்பாணம்)



கைதடி தெற்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி யோகேஸ்வரன் அவர்கள் நேற்று (24.08.2022) புதன்கிழமை காலமானார்.
அன்னார் பொன்னுச்சாமி-பொன்னுப்பிள்ளையின் பாசமிகு மகனும் அமரர் கதிரவேலு பவளம் ஆகியோரின் பாசமிகு மருமகனும் சுகந்தினி (நிதி) அவர்களின் பாசமிகு கணவரும், அபிராமி, யஸ்விந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தேவகி, அருந்தவம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆனந்தராசா (சுவிஸ்), செல்வமணி, சர்வானந்தன் (இத்தாலி), நாகேந்திரன், பிரபாயினி (சுவிஸ்), கிரிஜா (இத்தாலி), கேதீஸ்வரன் (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும் வருணனன், அஸ்வின், அர்ஸ்சிதா, மதுகிசன், ருத்விகா ஆகியோரின் பாசமிகு மாமனரும் முகுந்தன் அவர்களின் சிறிய தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2022) வியாழக்கிழமை பிறபகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 31.07.1974 மறைவு 24.08.2022

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 - 08 - 1941



மறைவு 24 - 08 - 2022

## திருமதி நாகேஸ்வரி கந்தசாமி (பபி ரீச்சர்)

(ஓய்வுபெற்ற ஆசிரியை-
யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலயம்)

யாழ். மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. நாகேஸ்வரி கந்தசாமி அவர்கள் நேற்று (24.08.2022) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், சரவணபவான் (ஆசிரியர் - யா/சாவகச்சேரி மகளீர் கல்லூரி) அவர்களின் அன்புத் தாயாரும், யாழினி அவர்களின் அன்பு மாமியாரும், பாலமுருகன், எழில்முருகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ராஜேஸ்வரி, விநாயகமூர்த்தி, தெய்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2022) வியாழக்கிழமை காலை 8.00 - 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நேரியகுா இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 911 2279

# மரண அறிவித்தல்

## திருமதி நாகேஸ்வரி யோகநாதன்

(முன்னைநாள் வேலணை மத்திய கல்லூரி விடுதி மேற்பார்வையாளர்)



தோற்றம்: 10.12.1943 மறைவு:22.08.2022

வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும் லண்டன் WEMBLEY ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி யோகநாதன் கடந்த (22.08.2022) திங்கட்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை பராசக்தி தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை இரத்தினம் தம்பதியரின் மருமகளும், யோகநாதனின் அன்பு மனைவியும் Dr. வராஜினி, தர்ஷினி (LAWYER) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr. அரவிந் முருகானந்தன் அவர்களின் அன்பு மாமியாரும், தரண், அரண் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், ஞானசௌந்தரி (விவாக பிறப்பு இறப்பு பதிவாளர் தீவகம், சமாதான நீதவான் வேலணை), இராஜேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்), புவனேஸ்வரி (லண்டன்), பஞ்சேஸ்வரி (லண்டன்), உதயமூர்த்தி (ஜேர்மன்), உதயராணி (லண்டன்), காலஞ்சென்ற உமா ஆகியோரின் மூத்த சகோதரியும், காலஞ்சென்ற சிவநாதன், ஞானரெட்ணம், பரஞ்சோதி, கலைவாணி, கதிர்காமநாதன், காலஞ்சென்ற சிவஞானம், செல்வராசா, சரவணபவன், வன்மீக லிங்கம் ஆகியோரின் மைத்துனியும், வாகீசன், ஆரூரன், தர்ஷன், நிறைஞ்சன், யாழினி, தாரணி, பாமினி, மதுவந்தன், சாளினி, சாரங்கன், பிரணவன் ஆகியோரின் பெரியம்மாவும், நிர்ஷினி, சாம்பவி ஆகியோரின் பெரியத்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (28.08.2022) ஞாயிற்றுக்கிழமை (GOLDERS-CREMATORIUM) லண்டனில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஞானசௌந்தரி சிவநாதன்
077 3016 368

பிரகாசிகை இல்லம்
சித்தைவனம்பிள்ளையார்
கோவிலடி, வேலணை-5.

திரு.திருமதி ஞானரெட்ணம்
இராஜேஸ்வரி குடும்பத்தினர்.
076 891 9513

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் சப்பை ரதத் திருவிழா நேற்றுமாலை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ இடம்பெற்றது.

## அநாவசிய...

இலங்கை அரசாங்கத்தினால் 300 க்கும் மேற்பட்ட பொருள்களுக்கு இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருள்களையாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த 300 பொருள்களின் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

'மக்களின் பசியையாவது போக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன்தான் நான் பிரதமர் பதவியை (மே மாதம்) பொறுப்பேற்றேன். அதன் பின்னர் நாடு எதிர்கொண்டுள்ள மோசமான நிலைமையை கருத்திற்கொண்டு ஜனாதிபதி தெரிவில் நான் போட்டியிட்டேன். மக்களின் பிரதிநிதிகள் ஒன்றுகூடியிருக்கும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்துடன் ஜனாதிபதியாகத் தெரிவாகினேன். எனினும் மிகவும் சவால்மிக்க காலகட்டத்தில்தான் இந்த அதி உயர் பதவியில் நான் இருக்கின்றேன்.

பொருளாதார ரீதியில் மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நான் முதலில் தீர்வு கண்டே தீருவேன். அதன் பின்னர் தேசிய ரீதியிலான ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் அனைத்துக் கட்சிகளின் கலந்தாய்வுடன் தீர்வுக்கான எனது பயணம் தொடரும்' என்று ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

(அ-ஒ-22)

## ஐ.எம்.எப்...

னான (ஐ.எம்.எவ்.) ஆரம்பகட்ட கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கை எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடியின் தற்போதைய நிலைமை குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

மேலும் நாளை வெள்ளிக்கிழமை மீண்டும் கலந்துரையாடல் நடத்துவதற்கும், எதிர்காலத்தில் மத்திய வங்கி அதிகாரிகளுடன் தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுக் குழுவின் தலைவர் பீட்டர் புரூபர், பிரதித் தலைவர் ஒசைரோ கொசையிகோ, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி டுபாகன்ஸ் மற்றும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலர் சமன் ஏக்கநாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உட்படப் பலர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ-ஒ-22)

## நல்லூரானுக்கு...

உற்சவம் இன்று நடைபெறவுள்ளது. காலை 6.15 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று, நல்லூர்க் கந்தன் காலை 7 மணிக்கு தேரடியை நோக்கிப் புறப்படுவார். காலை 7.15 மணிக்கு தேர் திருவீதி உலா புறப்படும்.

கடந்த 2 ஆண்டுகளாக பெருந்திருவிழாவின் தேர் வெளிவீதி வலம் இடம்பெறவில்லை. இந்த ஆண்டு இடம்பெறுவதால் லட்சக்கணக்கில் பக்தர்கள் திரளுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ஒ-5)

## அமைச்சரவையில்...

உரிய இடம் வழங்கப்படும். இதில் ஜனாதிபதி உறுதியாக இருக்கின்றார் - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவையில் பெரமுனவுக்கு அதிகளவு அமைச்சுப் பதவிகள் வழங்க வேண்டும் என்று அந்தக் கட்சியின் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்திருந்த நிலையில், அது தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே பிரதமர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

புதிய அமைச்சரவையில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது ,அந்தக்கட்சியின் முக்கியஸ்தர்கள் வலியுறுத்தியிருந்தமை உண்மைதான். எனினும், இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதிக்கும் 'மொட்டு' கட்சிக்கும் இடையில் எந்த முரண்பாடும் இல்லை.

அமைச்சுப் பதவிகள் தொடர்பில் 'மொட்டு' கட்சியினர் ஏற்கனவே என்னுடனும் பேச்சு நடத்தியுள்ளனர். எனவே, யார் யாருக்கு எந்த அமைச்சு வழங்குவது என்பது தொடர்பில் ஜனாதிபதியே இறுதி முடிவு எடுப்பார் - என்றார்.

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பொதுஜன பெரமுனவிலேயே அதிகளவானோர் இருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-5-22)

## மின்சாரக்...

செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் நகர்ப் பகுதியில் இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான மின்சாரக் கம்பிகளை சட்டவிரோதமான முறையில் ஒருவர் கடத்திச் செல்வதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் வீதிச் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த பட்டா ரக வாகனத்தை வழிமறித்து சோதனைக்கு உட்படுத்தியபோது ஐந்து மூடைகளில் 93 கிலோ மின்சாரக் கம்பிகள் கைப்பற்றப்பட்டன.

சம்பவத்தில் 43 வயதான சுன்னாகத்தைச் சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(அ-ஒ-125)

## தாலிக்கொடியை...

பெற்றது. வவுனியா கனகராயன்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தாலிக்கொடியை சிவில் உடையில் வந்த சிப்பாய் அறுத்துக்கொண்டு அங்கிருந்து தப்பியோடினார். எனினும் , போக்குவரத்து பொலிஸாரின் உதவியுடன் அந்தப்பகுதி பொதுமக்கள்அவரைத் துரத்திப் பிடித்துள்ளனர்.

சிவில் உடையில் தாலிக்கொடி அறுத்தவர் சிப்பாய் என்பது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், பொதுமக்களால் அவர் கனகராயன்குளம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ-ஒ-110)

## கடன்...

இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிக்கேய் ஏசியாவுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலில், இது தொடர்பில் சீனாவுடன் உடன்பாட்டை எட்டுவது எளிதான காரியம் அல்ல என்பதையும் அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஏற்கனவே பெற்ற கடனை மறுசீரமைக்க வேண்டியதன் அவசியத்தை, சீன அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளாரென ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரத்தலம் கற்பக விநாயகர் தேர் நாளை

யாழ்ப்பாணம், ஓக. 25

பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயப் பெருந்திருவிழாவின் தேர் உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. காலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று காலை 9 மணிக்கு தேர் திருவீதி உலா இடம்பெறும். (ஒ-5)

### தொலைபேசிகளை...

பிரியசாத் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த, மிலான் ஜயதிலக்க ஆகியோரின் கையடக்க தொலைபேசிகளை குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் நேற்று ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கைத்தொலைபேசிகள் கையளிக்கப்படும் வரை சந்தேகநபர்களை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே மேலும் உத்தரவிட்டுள்ளார்.
தொலைபேசிகளை கையளித்த பின்னர் சந்தேகநபர்களை விடுவிக்குமாறு நீதிவான் மேலும் உத்தரவிட்டுள்ளார்.
கடந்த தவணையில் கைத்தொலைபேசிகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு பணித்த போதும் அவர்கள் ஒப்படைக்கவில்லை என்பதை நீதிவானின் கவனத்துக்கு நேற்று கொண்டு வந்ததையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
(அ-ஒ-இ)


### சுதுமலையில்...

வைக்கப்பட்டிருந்த ஓட்டோ, மோட்டார் சைக்கிள் மீது பெற்றோல் ஊற்றி தீயிட்டு எரித்துள்ளதுடன், வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளையும் அடித்து நொருக்கி விட்டு கும்பல் தப்பிச் சென்றுள்ளது.
தாக்குதலுக்குள்ளான வீட்டில் வசிக்கும் இளைஞனை, மானிப்பாயில் அண்மையில் இடம்பெற்ற கடை ஒன்றின் மீதான வாள்வெட்டு தாக்குதல் தொடர்பில் வாக்கு மூலம் பெறுவதற்கு மானிப்பாய் பொலிஸார் அழைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.
(அ-ஒ-125)

### ஜோசப்...

ஜனாதிபதி செயலகத்துக்குள் பலவந்தமாகப் பிரவேசித்தனர் என்று குற்றஞ் சுமத்தப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலர் ஜோசப் ஸ்டாலின் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
மேற்படி குற்றஞ்சுமத்தப்பட்ட முன்னிலை சோஷலிஸக் கட்சியின் பரப்புரைச் செயலர் துமிந்த நாகமுவ, அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் மற்றும் நளீன் குணவர்த்தன ஆகியோரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.
நால்வரும் தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (அ-ஒ-22)

## மரண அறிவித்தல்



### சுப்பையா இராசரத்தினம்

(இளைப்பாறிய ஆயுள்வேத வைத்தியர்)

தர்மக்கேணி, பளையைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வடக்கு, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இராசரத்தினம் அவர்கள் நேற்று (24.08.2022) புதன்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சுப்பையா குழந்தை நாச்சியார் தம்பதியரின் புத்திரனும்,காலஞ்சென்ற சின்னத்தம்பி, இராசம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, தர்மலிங்கம், லட்சுமிப்பிள்ளை, இரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரரும், சுகிர்தமலர், சிவமலர், சோதிமலர், பரமேஸ்வரன், புனிதமலர் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அன்னலிங்கம், மகேஸ்வரன், கமலேஸ்வரன், மதுரா, வினோத் ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருசாந், கீர்த்திகா, கௌசிகன், கோபிகன், சிவானுஜன், சோபிதா, துளக்சிகா, துளக்சன், கவின்மிஹிரன், அருண்நேதரன், அனுராகவ், கஜனன், கவினயா, காருண்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பாலாவித்தாள் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**கச்சாய் வீதி, கொடிகாமம்**
**077 664 7977**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 10.05.1939
மறைவு 28.07.2022

கடந்த 28.07.2022 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு

### அமரர் பரமேஸ்வரி சிவயோகலிங்கம்

(ஓய்வுபெற்ற உப அஞ்சல் அதிபர் - மருதடி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.08.2022) வியாழக்கிழமை அதிகாலை 05.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அந் நிகழ்விலும் 27.08.2022 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 10.30 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
மேலும் அன்னாரின் மறைவுச்செய்திகேட்டு உடன் வ்ந்து உதவி புரிந்தோர்க்கும், தொலைபேசி மற்றும் நவீன தொடர்புச்சாதனங்களூடாக அனுதாபம் தெரிவித்தோர்க்கும், மற்றும் மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் பதாகைகளூடாக எங்கள் துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கணவர் து.சிவயோகலிங்கம்**
**மற்றும் குடும்பத்தினர்.**
**தொ.பேசி: 021 226 3885, 077 805 2884**

பிரதானவீதி, மருதடி,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.